**இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு – 2014**

---------------------------------------------------------------------------------

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநரை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான

உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை

கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் படி நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள், நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பன திரவத் தன்மை ஒழுங்கு முறையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டு முதல் நடைமுறைச் சொத்தின் கீழ் பெறவேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்ட இரண்டு கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 477,720 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்துவைப்பற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2014 யூலை 04 ஆந் ஆணைக்குழுவிற்காக இரண்ட வருட | |

| | | |
|---|---|---|
| | திகதிய கொள்வனவு செயற்கோவைக்கான மேலதிக 28 ஆம் இலக்கத்தின் 2.14.1 ஆம் பந்தி | காலப்பகுதிக்கு கட்டிடமொன்றை வாடகைக்குப் பெறும் போது திறந்த போட்டியாளர் கேள்வி கோரப்படாமல் சந்தை விலையினைப் பின்பற்றி மாதாந்தம் ரூபா 600,000 படி வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு சுற்றறிக்கைக் கோவையின் 8.9.1(ஆ) | ஆணைக்குழுவால் அலுவலகக் கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றமை தொடர்பாக முறையான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் மதிப்பீட்டு அறிக்கையும் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 4,435,997 பற்றாக்குறையைக் காண்பித்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,582,449 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 8,146,452 தொகையால் குறைவடைந்தமையைக் காண்பித்தது. முன்னைய ஆண்டில் ரூபா 9,534,221 தொகையான ஐயக் கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக அவ்வாறான ஏற்பாடு இன்மையினால் இப்பற்றாக்குறை குறைவடைந்தமைக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் நடைமுறைச் சொத்துக்களில் 200 சதவீத அதிகரிப்பைக் காண்பித்ததுடன், அதற்காக புத்தாக்குநர்களுக்கு வழங்குவதற்காக தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 8,000,000 தொகை பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பாடசாலை புத்தாக்கங்களை அமுல்படுத்துவதற்காக 8 கருத்தரங்குகள் நடாத்த வேண்டிய போதிலும் 4 கருத்தரங்குகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) புத்தாக்குநர்களின் செயற்திட்டத்திற்காக முதலீட்டை மேற்கொள்கின்ற முதலீட்டிற்காக (Angel Investors) ரூபா 10 மில்லியன் வரிச் சலுகை வழங்குவதற்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநர்களை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுவின் அதிகாரம் மற்றும் நோக்கங்களுக்கிடையே மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்படாத செயற்பாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) ‘‘பேடன்ட்’’ அனுமதிப்பத்திரத்தை பிணையாக வைத்து அரசாங்க அல்லது ஏனைய நிறுவனங்களிலிருந்து கடன் பெறக்கூடிய வகையில் வணிக ரீதியில் பெறுமதியுடைய புத்தாக்கங்களுக்கு பரிந்துரை வழங்குதல்.

(ii) அதிகாரம் வழங்கப்பட்ட புத்தாக்குனர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் பொது ஆராய்ச்சிக் கூடமொன்றை ஆரம்பித்தலும் நடாத்திச் செல்லலும்.

(iii) இலங்கையின் இளைஞர்களுக்கிடையே புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தைரியம் ஊட்டுவதற்காக கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆக்கத்திறனான சங்கங்களை அமைத்தல்.

(ஈ) வருடாந்தம் நடாத்தப்படுகின்ற புத்தாக்கங்களின் பூர்த்திக் கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழாவிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 15,884,019 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்தக் கண்காட்சி தொடர்பாக சமூக விழிப்புணர்வு ஆகக் குறைந்த மட்டத்தில் இருந்த காரணத்தால்

நிகழ்ச்சித் திட்ட வடிவமைப்பாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) 2006 யூன் 06 அந் திகதிய 2006/23 ஆம் இலக்க கல்வி அமைச்சுச் சுற்றறிக்கையின் படி பாசாலை மாணவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி ஒவ்வொரு வருடத்திலும் பாடசாலை மட்டத்தில் புத்தாக்கங்களின் கண்காட்சியொன்றை நடாத்தி சான்றிதழ் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

புத்தாக்குநர்களாக இனங்காணப்பட்ட 12 நபர்களுக்கு புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்காக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது உடன்படிக்கை கைச்சாத்திடாமல் ரூபா 10,200,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கடன் வழங்கும் போது அவர்களின் ‘‘பேடன்ட்’’ அனுமதிப்பத்திரத்தின் மூலப் பிரதி பிணையாக வைக்கப்பட வேண்டிய போதிலும் 8 பேர்களினது ‘‘பேடன்ட்’’ அனுமதிப்பத்திரம் பிணையாக வைக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 பதவியணியினர் முகாமைத்துவம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறைவேற்று தரமற்ற பதவியணியில் 03 வெற்றிடங்கள் காணப்பட்டன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டில் மதிப்பிடப்பட்ட செலவினத்தையும் உள்ளபடியான செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை மிகை மதிப்பீட்டு முரண்கள் ஏற்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன் நிருவாகம்

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) பதவியணியினர் முகாமைத்துவம்